<u>**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

<u>**02.06.2025.**</u>

OS. No. 223/2012

பக்கம் 6

DW1 ரங்கநாதன்

<u>**வாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

என்னுடைய சகோதரர் ராதாகிருஷ்ணனுக்கு 1ம் பிரதிவாதி அவரது தந்தை பிரதிவாதியும், பொது அதிகாரம் தாவாசொத்து கொடுத்திருந்தார் என்றால் சரிதான். 1994 ஆண்டு கொடுக்கப்படட பொது அதிகாரம் 1995 பொது அதிகாரம் முதல் பிரதிவாதியின் தந்தை காலமாகி விட்டப்படியால் செல்லுப்படி ஆகிவிட்டபட்டது அதன்படி 2001 ஆண்டு நானும், என்னுடைய சகோதரரும் முதல் பிரதிவாதி மற்றும் அவருடைய மகன்களிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மகன்களிடமிருந்து கிரையம் எழுதி வாங்கிகொண்டது தாவா சொத்து அவரது பிதுரார்ஜித சொத்தாகும் என்றால் சரிதான். இந்த கிரையம் செய்யப்பட்டபோது 1ம் பிரதிவாதிக்கு வாதிகள் சகோதரிகள் என்ற விவரம் எனக்கு தெரியும். குப்புசாமியின் வாரிசுகள் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதிகள் ஆகியோர்கள் என்ற விவரம் வாரிசு, வாரிசு சான்றிதழ் மூலம் எனக்கு தெரிந்தது. வாதிகளுக்கு 1988 முன்பே திருமணம் ஆகிவிட்டதால் அவர்களுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை இந்த விவரத்தை என்னுடைய கிரைய பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளின் ஒருவருக்கு 1990 ஆண்டிலும் மற்றொருக்கு 1989 ஆண்டின் இறுதியிலும் திருமணம் ஆனது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிமை உள்ளது அவர்களின் சம்மதம் இல்லாமல் எவ்வித தாவா சொத்து கிரையம் செய்தது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு 1988 முன்பே எந்த வருடம் தேதி மாதம் வருடத்தில்

திருமணம் நடைபெற்ற விவரம் குறிப்பிட்ட சொல்லமுடியாது. முதல் பிரதிவாதி தாவா சொத்தை கிரைய செய்த உடனேயே சுவதீனம் கொடுக்கவில்லை. முதல் பிரதிவாதி தாவா சொத்தில் காலிசெய்ய கால அவகாசம் கேட்டார் என்பது குறித்து எதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 1 முதல்4 பிரதிவாதிகளை தாவா சொத்தில் காலி செய்ய வாடகை கட்டுப்பாடு தாக்கல் செய்து அந்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த மேல்முறையிட்டு வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ5 மற்றும் 6 ஆவணங்கள் அடிப்படையில் 1988 முன்னேரே வாதிகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்று எதாவது ஆவணம் காட்டிஉள்ளதா என்றால் இல்லை. முதல் பிரதிவாதி எனக்கு நன்கு தெரியும், விசேஷயங்களுக்கு அழைப்பார். வாசா.ஆ5 மற்றும் 6 ஆவணங்கள் எனக்கு அழைப்பிதழ்கள் வரப்பெற்றது என்று சொல்வது தவறு. வாதிகளுக்கு எந்த ஒரு பாகத்தையும் கொடுக்ககூடாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னட்டு தாவா சொத்திற்ககான வில்லங்க சான்றிதழ் போட்டு பாரத்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் தலா மூன்றில் ஒரு பாகம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதது என்றால் சரியல்ல. இந்து வாரிசு உரிமை சட்டத்தின் கீழ் 1989 ஆண்டிற்கு பின்னர் வாதிகளுக்கு திருமணம் நடைபெற்ற பின்னர் அவர்கள் பாகம் பெற தகுதி உடையவர்என்றால் சரிதான். வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

Sd/– K.S. அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.